**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
MCOP 350/2021
**ம.சா.1 முருகேஸ்வரி**

| | |
|---|---|
| Name | : முருகேஸ்வரி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 26.06.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 04.10.2018 ம் தேதியன்று இலத்தூர் காவல்நிலைய குற்ற எண்.234/2018 என்ற எண்ணில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை – ஜெராக்ஸ். – ம.சா.ஆ.1. மனுதாரருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு – ஜெராக்ஸ். – ம.சா.ஆ.2. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 04.10.2018 முதல் 12.10.2018 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு வழங்கிய விடுவிப்புச் சான்று – அசல். – ம.சா.ஆ.3. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 21.03.2020 முதல் 25.03.2020 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு வழங்கிய விடுவிப்புச் சான்று – அசல். – ம.சா.ஆ.4. KL–25–D–5758 என்ற பதிவெண் கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.5. TN–76–AB–2248 என்ற பதிவெண் கொண்ட

காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.6. TN–76–M–6849 என்ற பதிவெண் கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.7. சம்பவ இடம் பற்றிய மாதிரி வரைபடம் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.8. சம்பவ இடம் பற்றிய பார்வை மகஜர் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.9. குற்ற இறுதி அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.10. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 04.10.2018 முதல் 12.10.2018 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு வழங்கிய கட்டண ரசீது – ரூ.1,87,034/– அசல். – ம.சா.ஆ.11. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 29.11.2018 முதல் 30.11.2018 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கான மருத்துவமனை விடுவிப்பு சான்று – அசல். – ம.சா.ஆ.12. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 29.11.2018 முதல் 30.11.2018 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு செலுத்திய கட்டண ரசீது – ரூ.8,323/ – அசல். – ம.சா.ஆ.13. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 07.02.2019 முதல் 08.02.2019 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கான மருத்துவமனை விடுவிப்பு சான்று – அசல். – ம.சா.ஆ.14. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 07.02.2019 முதல் 08.02.2019 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு செலுத்திய கட்டண ரசீது – ரூ.5550/– – அசல். – ம.சா.ஆ.15. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 26.08.2019 முதல் 27.08.2019 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று – அசல். – ம.சா.ஆ.16. மனுதாரர் ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 26.08.2019 முதல் 27.08.2019 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு செலுத்திய கட்டண ரசீது – ரூ.5630/– – அசல். – ம.சா.ஆ.17. மனுதாரர்

ஆவுடையானூர் சி.ஜே.மருத்துவமனையில் 21.03.2020 முதல் 25.03.2020 வரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றதற்கு செலுத்திய கட்டண ரசீது – ரூ.56800/– – அசல். – ம.சா.ஆ.18. மனுதாரர் ஊடுகதிர் எடுத்ததற்காக செலுத்திய கட்டண ரசீது – ரூ.5100/– – அசல் – ம.சா.ஆ.19. மனுதாரருக்கு மூளைப் பகுதியில் எடுக்கப்பட்ட ஊடுகதிர் – அறிக்கை – அசல் – ம.சா.ஆ.20. மனுதாரருக்கு எடுக்கப்பட்ட ஊடுகதிர் – அறிக்கை – அசல் – ம.சா.ஆ.21. மனுதாரர் வாடகை காரில் மருத்துவமனைக்கு சென்று வந்ததற்கு செலுத்திய கட்டண ரசீது – ரூ.70,500/– – அசல் – ம.சா.ஆ.22. மனுதாரர் ஆய்வகத்திற்கு செலுத்திய கட்டண ரசீது – ரூ.15,870 – அசல் – ம.சா.ஆ.23. மனுதாரருக்கு மருந்துகள் வாங்கியதற்கான ரசீதுகள் – 85 – ரூ.1,30,062.44 அசல் – ம.சா.ஆ.24. (இந்த ஆவணத்தில் மருத்துவரின் பரிந்துரை சீட்டுக்கள் இல்லாத காரணத்தினால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

<u>3 மற்றும் 5 வது எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் மில்லில் வேலை செய்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்து வருவதாக கூறுவதை நிரூபிக்க ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சிவசக்தி என்ற சிவா என்பவர் விபத்தில் இறந்து விட்டார் என்றாலும், அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றாலும் சரிதான். நான் தென்காசி – மதுரை செல்லும் மெயின் ரோட்டில் துரைச்சாமியாபுரம் பிள்ளையார்கோவிலின் முன்பு மேற்படி தென்வடல் ரோட்டின் மேற்கு பக்கம் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சிவசக்தி என்ற சிவா என்பவர் TN–76–M–6849 என்ற மோட்டார் சைக்கிளில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து என் மீது மோதி விட்டார் என்று சொன்னால் சரிதான். விபத்தில் இறந்து விட்ட சிவசக்தி என்ற சிவாவின்

வாரிசுகள் தான் மனுவில் குறிப்பிட்டுள்ள 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் என் மீது பைக் மட்டும் தான் மோதியது என்றால் சரிதான். வேறு வாகனங்கள் எதுவும் மோதியதா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சாட்சி வாக்குமூலத்தில் என் மீது மாருதி கார்(TN–76–AB–2248) மற்றும் KL–25–D–5758 என்ற காரும் மோதியதாக குறிப்பிட்டிருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த தகவலை போலீசில் தகவல் சொன்னது எனது மருமகன் சேர்மம் என்று சொன்னால் சரிதான். எனது மருமகன் போலீசில் கொடுத்த முதல் தகவல் அறிக்கையில் சிவசக்தி என்ற சிவா என்பவர் மட்டும் தனது மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து என் மீது மோதி விட்டதாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.8 ன் படி விபத்து தென்வடல் ரோட்டின் மேற்புறத்தில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சிவசக்தி என்ற சிவா ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளுக்கு விபத்து நடந்த சமயத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பதால் என் மீது 1 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் அவர்களது கார்களை ஓட்டி வந்து என் மீது மோதி விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிவசக்தி என்ற சிவா ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளுக்கு பதிவுத்தாள்கள் கிடையாது என்று சொன்னாலும், அவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் எனக்கு விபத்து ஏற்படுத்தியது மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த சிவசக்தி என்ற சிவா என்பவர் மட்டும் தான் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் இறந்து விட்ட சிவசக்தி என்ற சிவா மீது 1 ம்

எதிர்மனுதாரர் அவரின் காரினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளதாக போலீசாரால் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களுக்குரிய வாகனங்கள் விபத்து சமயத்தில் 3 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் நிறுவனத்தின் காப்பீடு செய்யப்பட்டிருப்பதினால் நான் சட்ட விரோதமாக அவர்களிடம் இழப்பீடு பெற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் 3 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்களை தேவையில்லாமல் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களின் வாகனங்களால் விபத்து ஏற்படவில்லை என்பதினால் 3 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வலது கால் மற்றும் இடது காலில் பொருத்தப்பட்ட பிளேடுகள், ஸ்குரூ ஆகியவை சிகிச்சைக்கு பிறகு அகற்றப்பட்டு விட்டது என்று சொன்னால் வலது காலில் மட்டும் ஸ்குரூ தற்போது உள்ளது. எனது வலது முழங்கையில் பொருத்தப்பட்ட ஸ்குரூ மற்றும் பிளேடுகள் சிகிச்சைக்கு பிறகு அகற்றப்பட்டன என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்று சொன்னாலும், வருமானம் பாதிக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் விபத்திற்கு முன்பு போல தற்போதும் வேலை பார்த்து சம்பாதித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அனைத்தும் மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் மோசடியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சிவசக்தி என்ற சிவா மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து எனக்கு விபத்து ஏற்படுத்தியதால் அவருடைய வாரிசுகளான 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தான் எனக்கு

இழப்பீடு செய்ய கடமைப்பட்டவர்கள் என்றும், 3 மற்றும் 5 ம் எதிர்மனுதாரர்களை பொறுத்து எனது கோரிக்கை மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.